ஊடகத் தோழமைகளுக்கு வணக்கம்..

உலக மேடை நாடக வரலாற்றில் முதன் முறையாக, தொடர்ந்து 28 மணி நேரம் ஒரு முழு நீள மேடை நாடகம் அரங்கேறப் போகிறது. அன்னைத் தமிழை வளர்ப்பதில் என்றுமே ஆர்வமாக இருக்கும் வெளிநாட்டுத் தமிழர்களின் முயற்சி இது. சிங்கப்பூரில் நாளை (13.7.19) நடைபெற இருக்கிறது. கின்னஸ் சாதனையாகவும் இது பதிவு செய்யப்பட இருக்கிறது.

தங்கள் முயற்சியை தமிழகத்தில் உள்ள ஊடகங்கள் அறிந்து கொள்ள வேண்டும், உலகம் முழுதும் உள்ள தமிழ் மக்கள் நேரலை மூலமாக கவசம் நாடகத்தைப் பார்த்து மகிழ வேண்டும் என விரும்புகிறார்கள். வணிக நோக்கம் ஏதுமின்றி, என் ஆசைக்காக இந்தச் செய்தியை உங்களுடன் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

சிங்கப்பூர் தமிழர்களின் பெருமைக்குரிய முயற்சி இது. உங்கள் ஊடகத்தில் இதுகுறித்து செய்தி வெளியிட்டு அவர்களை ஊக்கப்படுத்துமாறு, உங்களில் ஒருவனாக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

- நன்றி..

ஜி.கௌதம்

குறிப்பு: கவசம் நாடகம் குறித்தும், அதிபதி நாடகக்குழு குறித்தும் மேல் விவரங்கள் வேண்டுபவர்கள், தொடர்பு கொள்ள வேண்டிய வாட்ஸப் எண்: **Subarshene +6582012323.**

நேரலையில் நாடகத்தைப் பார்த்து மகிழ..
https://www.youtube.com/watch?v=UTwc2lArcks&feature=youtu.be

---------------------------------------------------------------------------------------------------




வித்தியாசமான முறையில் தயாரிக்கப்பட்ட இந்நாடகத்தில் பல சிறப்பம்சங்கள் நிறைந்துள்ளது. நான்கு தலைமுறைகளாக, சிங்கையில் வாழ்ந்த ஒரு குடும்பத்தின் கதையை (1920 லிருந்து 2020 வரை நடக்கும் கதை), சிங்கப்பூரின் அரசியல் மாற்றங்கள், குடியேற்ற மாற்றங்கள், ஜப்பானியர்களின் ஆதிக்கம், ஆங்கிலேயர்களின் ஆக்ரமிப்பு, தமிழர்கள் வாழ்ந்த முறை, சிங்கையில் ஏற்பட்ட

மாற்றங்களைத் தமிழர்கள் எப்படி ஏற்றுக்கொண்டு மாறினார்கள், தமிழரின் பண்பாடு மற்றும் மொழியின் கலாச்சாரத்தைப் படம் பிடித்துக்காட்டுகிறது.

அன்றைய இளைஞர்களான… இன்றைய பெற்றோர்களும், அவர்களின் பிள்ளைகளும் காணும் வாழ்க்கை மாற்றங்கள். இவர்கள் கற்ற பாடங்கள் எப்படி அவர்களுக்குப் பயன்படுகிறது என்பதையும், அதிலுள்ள சவால்களை இன்றைய இளையர்களுக்கு ஏற்ப கதைச் சொல்கிறது.

இதில் 65க்கும் மேற்பட்ட நடிப்பு அனுபவமிக்க நடிகர், நடிகைகள் குறிப்பாக அனைவரும் மாணவர்கள். மற்றும் 35க்கும் மேற்பட்ட தொழில்நுட்பக் கலைஞர்கள் பங்குபெறுகிறார்கள். 600 பக்கங்களில், 50,000 அழகுத் தமிழ் வார்த்தைகளால் வசனம் எழுதப்பட்டுள்ளது

தொடர்ந்து நூண்ட நேரம் நடைபெறும் முதல் தமிழ் நாடகம் என்று உலக சாதனை நூலான கின்னஸ் புத்தகத்திலும், சிங்கப்பூரில் நூண்ட நேரம் நடைபெறும் முதல் நாடகம் என்று சிங்கப்பூர் புக் ஆப் ரெக்கார்ட்ஸிலும் பதிவுச் செய்து, ஒரே நேரத்தில் இரு சாதனைகளை நிகழ்த்த இருக்கிறார்கள்.

இந்நாடகம் வருகிற 13 ஜூலை 2019 சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பித்து, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை 14 ஜூலை 2019 மதியம் 1 மணிக்கு நிறைவுபெறும். திருப்பங்கள், மர்மங்கள், திகில் நிறைந்த 28 மணி நேரம் "**கவசம்**" கிராஸ்ரூட்ஸ் கிளப் அரங்கத்தில் அரங்கேற இருக்கிறது.



இந்த நாடகத்தை எழுதி, இயக்குவது புகழேந்தி என்ற படைப்பாளி.புகழேந்தி பற்றி..

நாடக ஆசிரியர் மற்றும் தன்முனைப்புப் பேச்சாளர். அவர் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பொது மற்றும் தனியார் அமைப்புகளுடன் இணைந்து பல பயிற்சிப் பட்டறைகள் நடத்தியுள்ளார். சிங்கப்பூர் விமானப் படையில் விமானியாகப் பணிபுரிந்தவர். இலக்கியத்தின் மூது கொண்ட ஈடுபாட்டால் வூ.ஜே என்ற பதிப்பகத்தை நிறுவி, 60க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இவரின் பல நூல்கள் பல மொழிகளில் மொழிப்பெயர்க்கப்பட்டு 18 நாடுகளில் விற்பனைச் செய்யப்பட்டுள்ளது. புதிய எழுத்தாளர்களின் படைப்பு எழுத்துக்களில் சிறந்து விளங்க உதவும் "டவர் ரைட்டிங்" முறையையும் உருவாக்கினார். பள்ளிகளிலும் சமூகங்களிலும் படைப்பு எழுதும் பட்டறைகளை நடத்த இவர் அவற்றைப் பயன்படுத்துகிறார். சங் நூல உத்தமன், விக்கிரமாதித்தன், தெனாலி, மிரட்டல், பந்தம், உதய சூரியன், நரகாசுரன், நடிப்போ நடிப்பு, கோசா, உங்கள் குழந்தைகளை புத்திசாலித்தனமாக வளருங்கள் போன்ற நாடகங்களை எழுதி, இயக்கியுள்ளார். மாணவர்கள் மட்டுமின்றி, பெற்றோருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தி வருகிறார். சமூக கிளப்புகள், சங்கங்கள் மற்றும் சிண்டா போன்ற சுய உதவிக்குழுக்களிலும் தனது பட்டறைகளை நடத்துகிறார்.